DEPOSITION OF WITNESS
(In the Court of the Principal District Munsif, Sankarankovil
O.S. No. 149/2020

| | |
|---|---|
| Deposition of Witness for | : Pw 1 |
| Name | : விஜயலட்சுமி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.09.2022 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 05th September 2022.

<u>முதல் விசாரணை</u>

நான் வழக்கின் 1ம் வாதி. நான் இன்று இவ்வழக்கில் சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

07.07.1993 தேதியில் மாரியம்மாள் வகையறா 1ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 1.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராது 1ம் தபசில் சொத்தை பொறுத்து 1ம் வாதிக்கு கொடுக்கப்பட்ட பட்டா எண். 1278 சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 2.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் வாதி கதவு எண். 4/134 வீட்டிற்குரிய செலுத்திய வீட்டு வரி ரசீது தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 3.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

31..01.2020 தேதியில் 1ம் வாதி 2ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 4.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

05.08.2020 தேதியில் 1ம் வாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 5.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புல எண்.503 க்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட புலப்பட நகல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 6.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

28.02.2020 தேதியில் 1ம் வாதி பிரதிவாதிகள் மீது தென்காசி மாவட்ட ஆட்சி தலைவருக்கு கொடுத்த புகார் மனு நகல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 7.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

02.03.2020 தேதியில் 1ம் வாதி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கொடுத்த புகார் மனு (நகல்) அசல் ரசீதுடன் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 8.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தபசில் சொத்தை காட்டக்கூடிய வாதிகள் தாக்கல் செய்யும் பிராது பிளான் அசல் தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 9.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் வாதி பெயரில் கதவு எண்.4/114, 4/134 வீட்டிற்கு செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் (எண்ணம் 18) தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 10.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2ம் வாதி பெயரில் கதவு எண். 4/114 ஏ வீட்டிற்கு செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் (எண்ணம் 3) தாக்கல் செய்கிறேன். அது (**வா.சா.ஆ. 11.**) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு ஒத்திவைக்கப்படுகிறது.